8th August 1966]

கேரளாவுக்கு ஏற்றுமதியான அரிசி

*218 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :
திரு ஏ. குஞ்சன் நாடார் :
திரு வை. சங்கரன் : } கனம் உணவு
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ம் ஆண்டு நவம்பர் முதல் இன்று வரை கேரளாவுக்கு ஏற்றுமதியான அரிசி என்ன விலைப்படி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது, மாவட்ட வாரியாக ?

THE HON. SRI V. RAMAIAH : A statement [a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : இதிலே விலை கொடுத்திருக்கிறது. எவ்வளவு அளவு அரிசி போய் இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : A quantity of 1,29,165 tons of rice was exported to Kerala from 1965 to 3rd May 1966 from various districts.

புலவர் கா. கோவிந்தன் : கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் அந்தந்த மாவட்டங்களின் தொகுப்பு விலை விதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விலை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இடையே எடுத்துக்கொண்டால் 7 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. தஞ்சாவூரில் 74 ரூபாய் என்றும் கன்னியாகுமரியில் 80.80 ரூபாய் என்றும் இருக்கிறது. இதே மாதிரி உயர்ந்த ரகம் புழுங்கலரிசி, பச்சரிசி நடுத்தர ரகம், புழுங்கலரிசி பச்சரிசி மட்டரகம், புழுங்கலரிசி பச்சரிசி எல்லா ரகங்களிலும் வித்தியாசம் இருக்கிறது. தொகுப்பு விலைகள் எப்படி நிர்ணயிக்கப் படுகின்றன ? ஏன் இந்த வித்தியாசங்கள் ஏற்படுகின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா: பூல் பிரைஸ் அந்த அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய நிலைமையைப் பொறுத்து, போக்குவரத்திலே உள்ள டிஸ்டன்ஸைப் பொறுத்து நிர்ணயிக்கப்படக்கூடிய விஷயம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்பொழுதும் தொடர்ந்து கேரளாவிற்கு நம்முடைய மாநிலத்திலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது அனுப்புவதாகத் தகவல் ஒன்றும் இல்லை.

உணவு தானியக் கட்டுப்பாடு

*219 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவுத் தானியங்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை நீக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால் எப்போது அமல் படுத்தப்படும் ?

---

[a] Printed as Appendix III at page 879.

[8th August 1966

THE HON SRI V. RAMAIAH : (a) There is no proposal at present to lift control over the foodgrains, and

(b) Does not arise.

திரு. கரு. சீமைச்சாமி : சார், தமிழ்நாட்டிலே உணவுப் பற்றுக் குறை இல்லை என்று முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பற்றுக்குறை இல்லாதபோது இந்தக் கட்டுப்பாடு எதற்கு? இந்தக் கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : பற்றுக்குறை இல்லை என்று சொல்வது அரிசியைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்குத்தன்னிறைவு உள்ள மாநிலமாக இருக்கலாம். ஆனால், இந்திய நாட்டின் ஒரு பாகமாக நம்முடைய மாநிலம் இருக்கின்ற காரணத்தாலே இந்தியாவின் சூழ்நிலைக்குத் தகுந்தவாறுதான் பல நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கிறது.

சோதனைச் சாவடிகள்

*220 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966 ஏப்ரல் மாதத்திலிருந்து எந்தெந்த மாவட்டங்களில் கொள்முதல் செக்போஸ்ட்டுகளை எடுத்துவிட முடிவு செய்யப் பட்டுள்ளது?

கனம் திரு. வெ. ராமைய்யா : சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களிலும் ஏன் அதை எடுத்துவிட முடிவு செய்யவில்லை? சேலம், கோயம்புத்தூர் போன்ற இடங்களில் மட்டும்தான் எடுக்க வேண்டுமா? மற்ற மாவட்டங்களிலும் எடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் குறிப்பிட்ட மாவட்டங்களில் பருவ நிலை சரியில்லாமல், உற்பத்தியே பாதிக்கப்பட்டிருந்தது. தீவிரக் கொள்முதல் செய்வதற்கு பொருத்தமாக இல்லாததால் அங்கே தீவிரக் கொள்முதல் இல்லை. மற்ற மாவட்டங்களில் தீவிரக் கொள்முதல் ஒரு கட்டத்தில் நடந்தது. தீவிரக் கொள்முதல் நடத்தப்பட்டு தொடர்ந்து இப்பொழுது கொள்முதல் வேலை நடந்து வருகிறது.

திரு. சா. கணேசன் : இந்த செக்போஸ்ட்கள் பெரும்பாலும் உணவுப் போக்குவரத்தைத் தடைசெய்யாமல் அதை மீறுவதற்கும் ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்குமே உதவியாக இருக்கின்றன என்பது பகிரங்கமான விஷயம். ஆகவே, அதை எடுத்து விடுவதன் மூலம் ஒழுக்க ஈனங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யுமா இவ்வரசு என்று அறிய விரும்புகிறேன்.